# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
## இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை, 2018/2019 – பருவம் - II
## SOC 2220 – பால்நிலைச் சமூகவியல்

இரண்டு (02) மணித்தியாலங்கள்
மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. பால் என்பது பால்நிலையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விளக்கி, பண்பாடு மற்றும் சமூகமானது இதனை உருவாக்குவதில் எத்தகைய நடிபங்கினை வழங்குகின்றது என்பதனை உதாரணங்களோடு கருத்துரைக்குக.

02. ஒன்றில்
“பெண்ணியவாதத்தின் ஆரம்பம் மற்றும் நீட்சித் தன்மையானது ஒரு நீள்வகையான செயற்போக்கினைக் கொண்டதல்ல. ஆங்காங்கே பல இழப்பீடுகளும் வீழ்ச்சித் தன்மைகளும் மற்றும் பிற்போக்கான வழிமுறைகளும் உள்ளடக்கிய செயற்போக்குகள் காணப்படுகின்றன”. பெண்ணியவாத இயக்கத்தின் பிரதான அடிப்படைகளைக் கொண்டு இக் கூற்றினைப் பரிசீலிக்குக.

அல்லது
‘பெண்கள் இயக்கம் ஆணாதிக்கத்திற்கும் மற்றும் பெண் அடக்குமுறைக்கும் எதிராக பல்வேறுபட்ட விளக்கங்களை எடுத்துரைக்கின்றது’ இரண்டேனும் பெண்ணியவாத அணுகுமுறைகளை உள்ளடக்கியதாக இக் கூற்றனைக் கருத்துரைக்குக.

03. மாக்கிரட் இச்செலின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு பெண்ணியவாத ஆய்வு முறையியலின் அடிப்படையினைக் கருத்துரைக்குக.

04. பாலியல் அடிப்படையின் ஆதாரமாகக் காணப்படுவது சமூகத்தினால் கட்டமைக்கப்பட்ட சமூகக் கட்டுமானம் மற்றும் சமூக உணர்வானது அடிப்படையாகக் காணப்படுகின்றது. இக்கூற்றினைப் பெண்ணியவாதக் கருத்தாடல் ரீதியாக ஆராய்க.

05. “மக்களின் ஆன்மீக விடுதலைக்காக பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட மதங்கள் செயற்படுகின்றன”. இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்களது விடைகளை உதாரணங்களுடன் விளக்குக.

06. “சமூகத்தினாலே உருவாக்கப்பட்ட பால்நிலைச் சமூகமயமாக்கல் மற்றும் அதனது நியாயப்படுத்துதல் சமூகத்தில் காணப்படுவதனால் பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட பெண்களுக்கு எதிரான வன்முறையானது உயர்வடைந்து காணப்படுகின்றது”. இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

**********************